**தூத்துக்குடி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் : திரு து.கணேஷ்மூர்த்தி, எம்.ஏ., பி.எட்.,**

 மூ.மு.எண். 2933 / அ1 / 2025 நாள் 16.06.2025

பொருள் : பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – தூத்துக்குடி மாவட்டம் – வானரமுட்டி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் செல்வன். கு. வாசுதேவமாரி என்பாருக்கு 29.09.2023 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 56703/அ4/இ1/2023, நாள் 21.09.2023.
2. தூத்துக்குடி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 05851/அ1/2023, நாள். 27.09.2023.
3. அரசாணை (நிலை) எண் .720 கல்வி நாள். 28.04.1981.
4. அரசாணை (நிலை) எண் .101 பள்ளிக்கல்வி (பட்ஜெட் – 1) துறை நாள். 18.05.2018.
5. அரசாணை (நிலை) எண். 151 பள்ளிக்கல்வி (பக(1)த் துறை நாள் 09.09.2022.
6. முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், வானரமுட்டி கடிதம் ந.க.எண். 112/அ1/2025, நாள் 26.05.2025.

---

பார்வை (1) மற்றும் (2) ல் காணும் செயல்முறைகளின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV தேர்வில் தேர்ச்சி பெற்று இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்டு, தூத்துக்குடி மாவட்டம், வானரமுட்டி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு நியமன ஆணை வழங்கப்பட்டு, 29.09.2023 பிற்பகல் முதல் பணிபுரிந்து வருகின்றார்.

அன்னாருக்கு பார்வை 3 மற்றும் 4 இல் காணும் அரசாணைகளின்படி இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 29.09.2023 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி வானரமுட்டி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரின் பரிந்துரையின்படியும், பெறப்பட்ட கருத்துருக்களின்படியும் இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் பெயர், பதவி மற்றும் அலுவலகம் (திருவாளர்) | இளநிலை உதவியாளர் பணியில் நியமனம் செய்யப்பட்ட ஆணை விவரம் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 1. | கு. வாசுதேவமாரி, இளநிலை உதவியாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், வானரமுட்டி | தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 56703/அ4/இ1/2023, நாள். 21.09.2023. | 29.09.2023 பிற்பகல் |

இளநிலை உதவியாளர் பணியில் 29.09.2023 பிற்பகல் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்திடுமாறு முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், வானரமுட்டி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – பணிப்பதிவேடு (அசல்)

முதன்மைக்கல்வி அலுவலர்
தூத்துக்குடி

பெறுநர் :

1. முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், வானரமுட்டி.
2. கு. வாசுதேவமாரி,
   இளநிலை உதவியாளர்,
   மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
   வானரமுட்டி (உரிய அலுவலர் மூலமாக)